செம்வாய்க்கிழமை, 1981 ஆகஸ்ட் 25

ஆவணி 9, துன்மதி, திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.''

செய்ய வேண்டுவன இவையே என்று நூல் அறிவாலும், நுண்ணறிவாலும் நன்கு தெளிந்து கொண்ட போதிலும் அந்த இடத்தின் நிலைமையையும் காலத்தின் போக்கையும் புரிந்து கொண்டு, அவைகளுக்கு ஏற்பவே செய்தல் வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திருச்சியிலுள்ள மின்வாரிய அலுவலகத்தை பெரம்பலூருக்கு மாற்றும் திட்டம்

* வினா எண். 41 திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மின் திட்டத்தில் திருச்சியில் உள்ள D.E./O & M/North அலுவலகத்தை பெரம்பலூருக்கு மாற்று மாறு (to shift) மின்வாரியம் ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அம்மாற்றம் நடைபெற்றுவிட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம். 29-7-80-ல் மின்வாரியம் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) 10-6-1981 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இப்படி அடிக்கடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலுவலகத்தை மாற்றிவிடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதி குறைவாகுமே; அப்படி மாற்றுவதின் நோக்கம் என்ன? அந்தப் பகுதிக்கு அதுபோன்று வேறு ஒரு அலுவலகம் திறக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: பெரம்பலூரில் உருவான கோட்டம் திருச்சியில் இருந்தது. அதை பெரும்பலூர் மக்கள் பெரும்பலூரில் வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அந்த மாற்றத்தைத்தான் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாற்றம் இதில் இல்லை.

குமரி மாவட்டத்தில் நிலவிடும் குறைந்த அளவு மின் அழுத்தம்

*வினா எண் 42—திரு. டி. மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரிமாவட்டத்தில் குமரி முனையிலிருந்து அந்த மாவட்டத்தின் கடைசி பகுதியான நீரோடி வரையிலும் மின் விளக்குகளின் வெளிச்சம் மங்கலாக எரிவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி அதிகமாக வெளிச்சம் கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) குமரி மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் வெளிச்சம் மங்கலாக எரியவில்லை. ஒரு சில கிராமங்களில் மட்டுமே அங்கு நிலவும் மின் அழுத்த குறைவினால் இந்த நிலை இருக்கிறது.

(ஆ) இக்குறை நிவர்த்திக்க நாகர்கோவிலிலும் தக்கலையிலும் உள்ள 66 கே.வி. உபமின் நிலையங்களை ரூ. 82 இலட்சம் செலவில் 110 கே. வி. உபமின் நிலையங்களாக உயர்த்தவும், மேலும் குழித்துறையில் ரூ. 1.7 இலட்சம் செலவில் ஒரு 66 கே. வி. தொடு உபமின் நிலையம் (Line TAP-Sub-station) அமைப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: விளவங்கோடு தாலுகாவில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் பெருவாரியாக இந்த மின் விளக்குகள் மிகவும் மங்கலாக, இரவு காலங்களில் மாணவர்களுக்கு படிக்கக் கூட வசதி இல்லாத அளவில் இரண்டு மூன்று ஆண்டுகளாக நிலைமை நிலவி வருகிறது. அதை மாற்றுவதற்கு அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் 83 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையங்களை அமைக்கவேண்டும் என்ற வேலைகள கும். நாகர்கோவில் துணை மின் நிலையம் டிசம்பர் 1981-ல் முடியும். தக்கலை துணைமின் நிலையம் மே 1982-ல் துவங்கப்பட்டு பத்து மாதங்களில் முடியும். இந்த இரண்டு துணை மின் நிலையங்களும் வந்த பிறகு நிச்சயமாக நிலைமை முன்னேறும். அதோடு மட்டுமல்ல. இப்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்கிற காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓரளவு நிலைமை நன்றாக உள்ளது.